# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அனைத்துலகத் தேர்வு

# 2013

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 10

**நேரம்: 180 மணித்துளிகள்**

**சுட்டெண்:** | | | | | | | | |

**மொத்தப்புள்ளிகள் : 100**

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 15 | | | |
| 6 | 05 | | | |
| 7 | 20 | | | |
| | மொத்தப் புள்ளிகள் | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.

1. பின்வருவனவற்றுள் உயிர்க்குறில் எழுத்துகள்

அ) ஆ ஈ ஊ ஏ ஐ  ஆ) உ எ ஏ ஐ ஔ
இ) அ இ உ எ ஒ  ஈ) அ இ ஈ ஐ ஓ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. இந்தியாவுக்கும் பாகித்தானுக்கும் இடையே பாயும் நதி

அ) நைல்நதி  ஆ) சிந்துநதி  இ) கங்கை நதி  ஈ) காவேரி நதி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. நாட்டிய அரங்கமாகத் தோன்றும் மருதத்தில் யாழிசை போன்று ஒலி எழுப்புபவை

அ) மயில்கள்  ஆ) குவளைகள் இ) பறவைகள்  ஈ) வண்டுகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. முழங்கும் கடல் சூழ்ந்த நாவலந்தீவு முழுவதையும் தமிழ் நாடாக்கிய சேர மன்னன்.

அ) சேரலாதன்  ஆ) நெடுஞ்சேரலாதன்
இ) இளங்கோ  ஈ) சேரன் செங்குட்டுவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. பின்வருவனவற்றுள் குற்றுயலுகரம் அல்லாதது

அ) பாம்பு  ஆ) புற்று  இ) பாக்கு  ஈ) வலு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. பச்சைக்கிளி கனிந்த பழத்தைக் கொத்தித் தின்றது. இச் சொல்லியத்தில் வந்துள்ள செயப்படுபொருள் அடைமொழி

அ) கனிந்த  ஆ) கொத்தித்
இ) பச்சைக்கிளி  ஈ) பழத்தை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. கூவும் அலைகடல் மீதும், பொங்கிக் குமுறி வெடிக்கும் எரிமலைமீதும் ஆணையுரைத்தவர்

அ) கவிஞர் முடியரசன்  ஆ) கவிஞர் பாவேந்தர்
இ) கவிஞர் கண்ணதாசன்  ஈ) கவிஞர் காசி ஆனந்தன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. குமரிக்கண்டத்தின் எஞ்சிய பகுதிகளாக இன்றுள்ள தமிழ் நாடுகளுள் ஒன்று

அ) அவுத்திரேலியா ஆ) தமிழகம் இ) ஆபிரிக்கா ஈ) அமெரிக்கா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. தமிழர் உடைமை எனக் கவிஞர் கண்ணதாசன் குறிப்பிடுவது

அ) அறியாமை ஆ) அஞ்சாமை இ) பேதமை ஈ) பொறுமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. மொழிக்கு இறுதியில் வரும் தமிழ் எழுத்துகளின் எண்ணிக்கை

அ) நூறு ஆ) இருபது இ) முப்பது ஈ) இருநூறு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. கரணிய (காரண) இடுகுறிப் பெயருக்கு எடுத்துக்காட்டு

அ) காற்று ஆ) பாம்பு இ) பறவை ஈ) வானொலி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. இன்றைய ஈரான்,ஈராக் ஆகிய நாடுகள் ____________ என அந்நாளில் அழைக்கப்பட்டது.

அ) மெசப்பத்தோமியா ஆ) அரப்பா

இ) மொகஞ்சதாரோ ஈ) பாகித்தான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. இலங்கை அரசு சிங்களம் மட்டுமே ஆட்சிமொழி என்னும் சட்டத்தைக் கொண்டு வந்த ஆண்டு

அ) 1965 ஆ) 1956 இ) 1957 ஈ) 1972

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. "நெற்றிக்கண்ணைக் காட்டினும் குற்றம் குற்றமே" என்று கூறியவர்.

அ) தருமி ஆ) நக்கீரர் இ) பாண்டிய மன்னன் ஈ) புகழேந்தி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. பின்வருவனவற்றுள் பொதுமொழி

அ) நட ஆ) கை இ) ஆறுவது சினம் ஈ) கானகம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. கண்டான் என்ற பகுசொல்லைப் பகுத்தால்

அ) கண் + ட் + ஆன் ஆ) கண் + ட் + அன்

இ) காண் + ட் + ஆன் ஈ) காண் + ட் + அன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. வேதாசலம் சுவாமி என்ற வடமொழிப் பெயரைத் தனித்தமிழுக்கு மாற்றியவர்

அ) தனிநாயகம் அடிகள் ஆ) மறைமலையடிகள்

இ) தேவநேயப்பாவாணர் ஈ) பரிதிமாற் கலைஞர்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. வில்லுப்பாட்டைத் தமிழகம் முழுவதும் பரப்பிய பெருமைக்குரியவர்.

அ) கலைவாணர் கிருட்டிணன் ஆ) சிவலிங்க ஆசிரியர்

இ) ஆறுமுகம் ஈ) சின்னமணி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. எட்டேகால் லட்சணமே! எமனேறும் பரியே! இங்கு பரி என்று குறிப்பிடப்படுவது

அ) குதிரை ஆ) யானை இ) குரங்கு ஈ) எருமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. கட்டினான் என்ற சொல்லைப் பிறவினையாக மாற்றினால்

அ) கட்டுவித்தான் ஆ) கட்டுகின்றான்

இ) கட்டுவான் ஈ) கட்டுகிறான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. 'அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்' என்ற பழமொழி குறிப்பது.

அ) பட்டறிவு பயன்தரும் ஆ) அறிவின் அடக்கம்

இ) விடா முயற்சி ஈ) வீண் பெருமை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. 'செவ்வழி முரல்வ சோலை' என்ற பாடல் வரியில் செவ்வழி என்பது

அ) காலைப்பண் ஆ) மாலைப்பண்

இ) இராப்பண் ஈ) சாயுங்காலப்பண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. திருக்குறளில் உள்ள அதிகாரங்களின் எண்ணிக்கை

அ) 1330 ஆ) 1030 இ) 130 ஈ) 133

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. துஞ்சினார் என்பது

அ) மரூஉ ஆ) இலக்கணப்போலி
இ) குழூஉக்குறி ஈ) மங்கல வழக்கு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. வெள்ளந்தி என்பது

அ) அதிகாலை ஆ) காலை இ) மாலை ஈ) மதியம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. தலைவணங்கினான் என்பது

அ) வினைத்தொகை ஆ) வேற்றுமைத்தொகை
இ) உவமைத்தொகை ஈ) அன்மொழித்தொகை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. இருபதாம் நூற்றாண்டின் பின்னர் இலங்கைத்தமிழரின் புலப்பெயர்வுக்கான கரணியம்

அ) வறட்சி ஆ) அரசியல் இ) நோய் ஈ) கடற்கோள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. காடு + அரண் என்பதைப் புணர்த்தினால்

அ) காடுஅரண் ஆ) காட்டரண் இ) காட்டுஅரண் ஈ) காடஅரண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. தாத்தா வந்தாள். என்பதில் இடம்பெற்றுள்ள வழு

அ) இடவழு ஆ) காலவழு இ) திணைவழு ஈ) பால்வழு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. வயலும் வயல் சார்ந்த இடமும்

அ) மருதம் ஆ) குறிஞ்சி இ) முல்லை ஈ) நெய்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

## 2) பாடநூல் வினா - ஏழில் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

1. புலப்பெயர்வு என்றால் என்ன?

2. இமயத்திலிருந்து வந்த துறவிகள் செங்குட்டுவனுக்கு என்ன கூறினர்?

3. இயற்கை இன்பம் என்ற பாடத்தில் அழகு என்பவள் எங்கெல்லாம் இருப்பதாகப் பாவேந்தர் கூறுகின்றார்?

4. தேவநேயப்பாவாணருக்கு வழங்கப்பட்ட பட்டங்கள் இரண்டினைத் தருக.

5. ஒட்டார்பின் சென்றொருவன் வாழ்தலி னந்நிலையே
கெட்டா னெனப்படுத லன்று
இக் குறளின் பொருளைத் தருக.

6. வில்லுப் பாட்டில் இசைக்கப்படும் இசைக் கருவிகள் நான்கு தருக.

7. புலமைச் செருக்கு என்ற பாடத்தில் பாண்டிய மன்னனுக்கு எழுந்த ஐயம் என்ன?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

### 3) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

பல்லாயிரம் ஆண்டுகட்கு முன்னரே, பைந்தமிழ் நலத்தைப் பேணக் கருதிய பாண்டியப் பேரரசர்கள்; தமிழ் நலத்தாற் சிறந்திருந்த சான்றோர்களுட் சிலரை ஒருங்கே கூட்டித் தமிழ்க் கழகங்களை நிறுவித் தாய்மொழியாகிய தன்னிகரில்லாத் தமிழ்மொழியைப் பேணிக் காத்தனர். ஆய்வுக் கழகங்களையும், அறிவியல் மன்றங்களையும் அமைத்துச் சிறந்திருந்தனர்.

இவ்வாறு கழகங்களை நிறுவித் தாய்மொழியைப் பேணிய பெருமை பழந்தமிழர்களுக்கு மட்டுமே உரியதாகும். களையும் தும்பும் தூசும் போக்கிப் பயனுள்ள நன் மணிகளை மட்டுமே தெளிந்தெடுத்தனர். அவை என்றென்றும் நிலைத்து நிற்குமாறு தொகுத்துக் காத்தனர். அந்தப் பழந்தமிழரது செயற்கரிய தமிழ்த் தொண்டினாலும் தமிழ்ப் பற்றினாலும் தமிழ் அறிவினாலும் எமக்குக் கிடைத்ததே புறநானூறு. பழந்தமிழ்ச் சான்றோர் தொகுத்துப் பேணிய தமிழ்ச் செல்வங்களுள் புறநானூற்றுத்தொகை நூல் ஒப்பற்ற ஒளிர் மணிக் கோவையாகும்.

தமிழ்தெரிந்த அனைவருமே புறநானூற்றைக் கற்க வேண்டும். புறநானூற்றுத் தமிழரைப் போன்றே அஞ்சா நெஞ்சமும் ஆராத் தமிழ்ப் பற்றும் மானவுணர்வும் பெற்றவர்களாகத் திகழ்தல் வேண்டும்.

1. கழகங்களை நிறுவி தாய்மொழியைப் பேணிய பெருமை யாருக்குரியது?

2. பழந்தமிழர்கள் எவற்றை அமைத்தனர்?

3. ஒப்பற்ற ஒளிர்மணிக் கோவை என இங்கு கூறப்பட்ட நூல் எது?

4. எதனால் எமக்குப் புறநானூறு கிடைத்தது?

5. தமிழ் தெரிந்த அனைவருமே எதைக் கற்க வேண்டுமெனக் கூறப்படுகிறது?

புள்ளிகள் 10

**4) பாடலை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

*என்ன தான் நடக்கும் நடக்கட்டுமே*
*இருட்டினில் நீதி மறையட்டுமே*
*தன்னாலே வெளிவரும் தயங்காதே - ஒரு*
*தலைவன் இருக்கிறான் மயங்காதே*

*பின்னாலே தெரிவது அரிச்சுவடி*
*முன்னாலே இருப்பது அவன் வீடு*
*நடுவினிலே நீ விளையாடு*
*நல்லதை நினைத்தே போராடு*

*உலகத்தில் திருடர்கள் சரிபாதி*
*ஊமைகள் குருடர்கள் அதில்ப் பாதி*
*கலகத்தில் பிறப்பது தான் நீதி - மனம்*
*கலங்காதே மதி மயங்காதே*

*மனதுக்கு மட்டும் பயந்து விடு*
*மானத்தை உடலில் கலந்து விடு*
*இருக்கின்ற வரையில் வாழ்ந்து விடு*
*இரண்டினில் ஒன்று பார்த்து விடு*

***கவிஞர் கண்ணதாசன்***

1. எதை நினைத்துக் கவிஞர் போராடச் சொல்கின்றார்?

________________________________________

________________________________________

2. எதில் நீதி பிறக்கும் எனக் கூறுகின்றார் கவிஞர்?

________________________________________

________________________________________

3. இருட்டினுள் எது மறைவதாகக் கூறப்படுகின்றது?

________________________________________

________________________________________

4. எதற்கு மட்டும் பயப்படும்படி கூறப்படுகின்றது?

______________________________________________

______________________________________________

5. இப் பாடலைப் படித்த பின்னர் உம் மனதில் தோன்றும் எண்ணம் யாது?

______________________________________________

______________________________________________

புள்ளிகள் 10

## 5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.

1. பின்வரும் செய்வினைச் சொல்லியத்தைச் செயப்பாட்டுச் சொல்லியமாக மாற்றுக.

   ஔவையார் ஆத்திசூடியை எழுதினார்.

   ________________________________________

2. வழுக்கள் எத்தனை வகைப்படும்? காலவழு, திணைவழு என்பவற்றிற்கு எடுத்துக்காட்டுகள் தருக.

   ________________________________________

   ________________________________________

3. பின்வரும் நிறுத்தற் குறிகள் இடம் பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

அ) வியப்புக்குறி ________________________

________________________

ஆ) ஒற்றை மேற்கோட்குறி ________________________

________________________

4. பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

அ) உம்மைத்தொகை ________________________

ஆ) வினைத்தொகை ________________________

இ) வேற்றுமைத்தொகை ________________________

5. சொற்பொருள் தருக.

| | |
|---|---|
| ஞாலம் ____________ | பரிதி ____________ |
| இணையர் ____________ | கணிகன் ____________ |
| ஏதிலி ____________ | அயில் ____________ |

**புள்ளிகள் 15**

## 6. பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

Azhakan ist ein guter Junge. Zur Schule fährt er mit dem Zug. Eines Tages sah er einen älteren Herren mit Gehstock, der an den Gleisen irritiert entlang lief. Azhakan erkannte, dass der Herr sein Sehvermögen verloren hatte. In dem Moment fuhr ein Zug rasant ein. Sofort rannte Azhakan auf den Herren zu, griff seine Hand und rettete ihn, indem er ihn wegzerrte. Andernfalls wäre es zu einem unmittelbaren Zusammenprall gekommen.Der ältere Herr bedankte sich bei Azhakan und lobte ihn für seine Tat.

Alagan is een aardige jongen. Hij gaat met de trein naar school. Op een dag zag hij een oude die op de treinrails stond, en de weg kwijt was. Alagan merkte op dat de oude man blind was. Op dat moment kwam er een trein met hoge snelheid aanrijden. Alagan sprong naar de man toe, en trok hem aan zijn arm en redde zijn leven, anders zou het fataal kunnen zijn afgelopen. De oude man bedankte Alagan en prees hem.

Azhagan è un bravo bambino.Lui va a scuola con il treno. Un giorno ha visto un signore anziano con il bastone camminare sulla ferrovia. Lui camminava barcollando. Azhagan ha visto che lui era cieco. A quel punto arrivava un treno molto velocemente.Azhagan ha corso prendendo per il braccio dell'anziano lo ha salvato. Altrimenti ci sarebbe stato un incidente. L'anziano ha detto grazie a Azhagan.

Alahan er en god dreng. Han tager bussen til skolen. En dag så han en gammel mand med en stok på vejen. Den gamle mand kunne ikke gå lige. Ahilan fandt ud af, at den gamle mand var blind. Pludselig kom der en bus med høj fart. Alahan løb hurtigt og hjalp den gamle mand ind. Hvis ikke han havde gjort det, kunne der være sket en ulykke. Den gamle mand takkede Alahan og roste ham.

Alagan är en bra pojke. Han åker buss till skolan. En dag såg han en gammal man med en stav på bussvägen. Han kämpade på vägen. Alagan upptäckte att han är blind. När detta hände kom en buss mycket fort. Alagan sprang och räddade den gamla mannen genom att dra hans hand. Annars skulle det blivit en olycka. Den gamla mannen tackade honom och berömde honom.

Alakan est un gentil petit garçon. Il part à l'école en voiture. Un jour, sur son trajet il vit un homme agé munit de sa canne. Le monsieur a perdu le sens de l'orientation.Alakan remarqua que celui etait un non voyant. A ce moment, le véhicule circulait rapidement. Alakan courra et tira la main de ce vieil homme et sauva sa vie.
Il remercia et félicita le jeune homme.

Alagan is a good boy. He goes to school by train. One day he saw an elderly man with the stick on the train track. He was struggling on the track. Alagan realised that he was blind. At that time a train was coming very fast. Alagan ran fast and pulled the elderly man's hand and saved his life. If not there would have been an accident. The elderly man thanked Alagan and praised him.

Allakan er en snill gutt. Han peiler å ta buss til skolen. En dag på vei til bussen så han en eldre mann med stokk. Mannen var fortvilet, da skjønte han at mannen var blind. I mens kom det en buss med full fart. Da løp allakan veldig raskt og fikk tak i hånden og dro eldre mannen. Hvis han ikke hadde reagert ville det ha skjedd en ulykke. Eldre mannen takket allakan og ga ros til ham.

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

புள்ளிகள் 05

**7) கீழுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர்.
- வில்லுப்பாட்டு
- உம்மால் மறக்க முடியாத ஒரு நிகழ்வு.

புள்ளிகள் 20